அப்புறம் மருத்துவமனைக்கு வருவார்கள் என்கிற பிரச்சினை எல்லாம் ஏற்படும் (மேசையைத் தட்டும் ஒலி) தயவு செய்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானம் விதி 55-ன் கீழ் கொடுத்திருக்கிறீர்கள். விதி 55(3)வது விதியைப் பாருங்கள்.

"Such notice shall be taken up within 7 days from the date of admission of such notice."

கேளுங்கள். அதை அவையில் எடுத்துக் கொள்வதற்கே admission கொடுத்ததற்குப் பிறகு 7 நாட்களுக்குள் எடுக்கலாம் என்று இருக்கிறது. (குறுக்கீடு) பேரவைத் தலைவர், நான் நிற்கிறபோது நீங்கள் நிற்கக் கூடாது என்று இன்னொரு விதி இருக்கிறது. (குறுக்கீடு) இது முறையல்ல. நான் வேறு விதமாக நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். தயவு செய்து உட்காருங்கள்.

3. அறிவிப்பு.

மாற்றுத்தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாற்றுத் தலைவர்கள் பட்டியல். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி 1-ன்கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் 5-வது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

திரு. ம. சின்னசாமி.

திரு. க. அர்ச்சுனன்

திரு. கி. தருமலிங்கம்.

திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஜி. பழனிசாமி.

திரு. செ. கு. தமிழ்அரசன்

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

உறுப்பினர்கள் கொடுத்த அறிவிக்கைகள் குறித்து —தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : (குறுக்கீடு) அடுத்து தண்டாயுதபாணி தயவு செய்து உட்காருங்கள். நீங்கள் 55—வது விதியின் கீழ் கொடுத்திருக்கிறீர்கள். 55—ன் கீழ் இருக்கிற விதியைப் பாருங்கள். அதற்கு மேல் நீங்கள் வற்புறுத்திக் கொண்டிருப்பது சரியல்ல. (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) அதை என் அறையிலே வந்து கேட்க வேண்டும். 7 நாட்களுக்குள் ஒரு நாளில் எடுக்கப்படும். (குறுக்கீடு) 7 நாட்களுக்குள் ஒரு நாளிலே எடுக்கப்படும். இன்றைக்கே எடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகிற ஒரு பிரச்சினை எப்படி 55—ன் கீழ் வரும் ? (குறுக்கீடு) என்னிடத்திலே கொண்டுவந்து கொடுத்தீர்கள். அந்த விதியை எல்லாம் பார்த்து அந்த விதிமுறைப்படி நடப்பதற்குப் பாருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். உட்கார வேண்டும். திரு. தண்டாயுதபாணி உட்கார வேண்டும். உட்கார வேண்டும். நடவடிக்கை எடுக்கவேண்டி வரும்.

முற்பகல் 11—15

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிச் சில உறுப்பினர்கள் எழுந்து, அவையின் நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்து இடையூறு செய்து கொண்டிருப்பது எந்த விதத்திலும் முறையல்ல. ஒன்று, அவர்களுடைய சட்டப் பேரவை கட்சித் தலைவராகிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய கட்சி உறுப்பினர்களைக் கட்டுப்படுத்த வேண்டும். அல்லது அவர்கள் பேரவைத் தலைவருக்காவது கட்டுப்பட வேண்டும், எல்லா விதிகளையும் மீறி அவர்கள் இப்படித் தொடர்ந்து இடையூறு விளைவிப்பார்களேயானால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் நிற்கும்போது உறுப்பினர்கள் எழுந்து பேசக்கூடாது என்கிற விதியை நானும் ஏற்றுக் கொள்கிறேன். அவர் எந்தப் பிரச்சினையை எழுப்ப வந்தார் என்பது எனக்கு முன்னால் தெரியாவிட்டாலும், இப்போது அவர்கள் பேசியதிலிருந்து மகாத்மா காந்தி அவர்களுடைய சிலை தகர்க்கப்பட்டது தொடர்பான பிரச்சினையை எழுப்ப முன் வந்திருக்கிறார்கள் என்று அறிகிறேன்.

1993 பிப்ரவரி 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் விதி 55-ன் கீழ் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : I am not disputing you நீங்கள் நடந்து கொண்ட முறை தவறு என்று நான் விமர்சிக்கக் கூட இல்லை. ஆனால் அவர்கள் அந்தப் பிரச்சினையைத் தான் எழுப்ப வருகிறார்கள். அதை இப்போது எழுப்ப அனுமதி தராவிட்டாலும்கூட, நீங்கள் அதை எழுப்ப எந்தத் தருணத்தில் அனுமதி தர முடியும் என்று தெரிவித்து விட்டால் சபை சுமூகமாக நடப்பதற்கு வசதியாக இருக்குமென்று நினைக்கிறேன். இது மிக முக்கியமான பிரச்சினை. நீங்கள் 55-வது விதியை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருப்பதைக் காட்டிலும் தேசப் பிதா மகாத்மா காந்தி அவர்களுடைய சிலை தகர்க்கப்பட்டிருக்கிறது, அது வெடி குண்டு வைத்துதகர்க்கப்பட்டிருக்கிறது. அதுதொடர்பாக ஒரு பிரச்சினை சபையிலே வருகின்ற நேரத்தில், எந்தக் கட்டத்திலே அந்தப் பிரச்சினையை எடுத்துக் கொள்ள இயலும் என்பதைத் தாங்கள் தெரிவிப்பது தான் முறை, அதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு தகவல். அவர்கள் வந்து கொடுக்கிறபோதே, நான் சொன்னேன், பொது விவாதம் இன்றைக்குத் தொடங்க இருக்கிறது. நீங்கள் மட்டுமல்ல, விவாதத்திலே கலந்து கொள்கிற எல்லா உறுப்பினர்களுக்கும் இந்தப் பிரச்சினையிலே பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பதில் அளிப்பதற்கு வாய்ப்பு கிடைக்கும். இது கவன ஈர்ப்புத் தீர்மானம் என்று ஒர் உறுப்பினர் எழுப்பிய பிரச்சினை என்று இருப்பதைவிட, இதையேகூட இன்றைக்கு நான் அனுமதித்து விட்டால் பொது விவாதத்தில் ஏனைய உறுப்பினர்கள் பேசுகிறபோது, இது ஏற்கனவே முடிந்து போன பிரச்சினை என்று அவர்களுக்கு நான் அனுமதி மறுக்க வேண்டி வரும். அவர்களிடத்திலே என்னுடைய அறையிலே இதைத் தெரிவித்திருக்கிறேன் என்பதைத்தான் நான் சொன்னேன். எனவே இதிலே மேற்கொண்டு விவாதத்தை வளர்க்க வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நான் இதை அவர்களுக்கு என்னுடைய அறையிலே தெரிவித்திருக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர். (குறுக்கீடுகள்)

(திரு. வி. தண்டாயுதபாணி மற்றும் சில காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளியேறினர்.)

3. அறிவிப்பு—தொடர்ச்சி.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்—தொடர்ச்சி.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : இது வேறு. நீங்கள் மாற்றுத் தலைவர் பட்டியல் என்று ஒரு பட்டியலைப் படித்தீர்கள். அதிலே காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் யாரேனும் இருக்கிறார்களா? அதிலே யாருடைய பெயரும் இடம் பெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. சிங்காரம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : திரு. கே. சிங்காரம் என்று சொன்னீர்கள். திரு. ஆர். சிங்காரம் என்று சொல்லவில்லை. திரு. கே. சிங்காரம் என்றுதான் படித்தீர்கள் திரு. ஆர். சிங்காரம் என்று படிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மன்னிக்க வேண்டும் அது திரு. ஆர். சிங்காரம் தான். மாற்றுத் தலைவர்கள் பட்டியலில் திருத்திக் கொள்ளலாம்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து—தொடர்ச்சி.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விதி 56-லே கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது விவாதம் தொடங்க இருக்கிற காரணத்தால் அது நிராகரிக்கப்பட்டிருக்கிறது என்பது உங்களுக்கு எழுத்து மூலமாகக் கொடுக்கப்படும்.

4. கவன ஈர்ப்பு.

பேராவூரணி பின்தங்கியோர் மாணவர் விடுதிக் கட்டிடம் இடிந்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்பு. திரு. ஆர்.சிங்காரம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆர். சிங்காரம்.